**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 464** **நாள்: 10.09.2026**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் இன்று (10.09.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் முனைவர் எஸ்.செல்வகுமார், மண்டல அலுவலர்கள், காணொலி காட்சியின் வாயிலாக கூடுதல் மற்றும் மண்டல நல அலுவலர்கள், துப்புரவு அலுவலர்கள், பூச்சியியல் வல்லுநர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் கொசு ஒழிப்பு களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

பெருநகர சென்னை மாநகராட்சியில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தாக்கம் குறித்து மண்டல நல அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் ஆய்வு செய்தார். நோய் காணப்படும் கோட்டங்களில் உள்ள சுகாதார ஆய்வாளர்களுக்கு தொடர்ந்து அப்பகுதிகளில் தீவிரமாக கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற வேண்டும் எனவும் களப்பணியாளர்களின் பணியினை தீவிரமாக குறுக்காய்வு செய்ய வேண்டும் எனவும் உத்தரவிட்டார். நோய் தாக்கத்தை குறைக்க கீழ்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

**<u>கொசுப்புழு ஒழிப்பு களப்பணியாளர்கள் (DBC) செய்ய வேண்டியவை</u>**

- காலை 7.00 மணிக்கு DBC பணியாளர்கள் பணிக்கு வருகை புரிய வேண்டும்.
- பணிபுரிய வேண்டிய இடத்திற்க்கான பணி ஒதுக்கீடு இடங்களுக்கு Gate Meeting முடிந்தவுடன் களப்பணிக்கு செல்ல வேண்டும்.
- களப் பணிக்கு தேவையான பொருட்களுடன் DBC பணியாளர்கள் பணியில் இருக்க வேண்டும்.
- வீடு வீடாகச் சென்று வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் கொசுப்புழு பெருக்கம் உள்ளதா என ஆய்வு செய்ய வேண்டும்.

- வீடுகளின் உட்புறத்தில் உள்ள மேல்நிலைத் தண்ணீர் தொட்டிகள், கீழ்நிலைத் தண்ணீர் தொட்டிகள், கிணறு, சிமென்ட் தொட்டிகள், குடங்கள், குளிர்சாதன பெட்டி, AC நீர் சேகரிப்பு தட்டுகள், பிளாஸ்டிக் டிரம்கள் ஆகியவற்றில் கொசுப்புழு உள்ளதா என ஆய்வு செய்ய வேண்டும்.
- வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கியுள்ள நீரை கண்டறிந்து அகற்ற வேண்டும்.
- வீடுகளின் வெளிப்புறத்தில் உள்ள பழைய டயர்கள், பூந்தொட்டிகள், தட்டுகள் மற்றும் அலங்காரத் தாவரங்கள் தேங்காய் ஓடுகள் மற்றும் இதர நீர் தேங்கும் பொருட்களை ஆய்வு செய்து கண்டறியப்பட்ட கொசுப்புழு பெருக்க ஆதாரங்களை அகற்றி சுத்தம் செய்ய வேண்டும்.
- பொதுமக்கள் கூடும் இடங்களான பூங்காக்கள் உணவு விடுதிகள், திரையரங்குகள் மற்றும் வணிக வளாகங்களை ஆய்வு செய்து அங்கே கொசுப்புழு வளரும் இடங்களை கண்டறிந்து அழிக்க வேண்டும்.
- அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள், புதிய கட்டுமானப் பணி இடங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களில் கொசுப்புழு வளரும் இடங்களை ஆய்வு செய்ய வேண்டும்.
- வீட்டு உரிமையாளர்களுக்கு தண்ணீர் சேமிப்புப் பாத்திரங்களை கொசு புகாத வகையில் மூடி வைக்க அறிவுறுத்த வேண்டும்.
- கொசுப்புழு கண்டறிந்த விவரங்கள் மற்றும் எடுத்த நடவடிக்கைகளை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்.
- கொசுப்புழு பெருக்கம் கண்டறியப்பட்ட வீடுகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- தினசரி களப்பணி ஆய்வின் போது வீட்டில் யாருக்கேனும் காய்ச்சல் இருந்தால் அதன் விவரங்கள் பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும்.
- தினசரி களப்பணி பதிவேடு முறையாகப் பாரமாரிக்கப்பட வேண்டும்.
- பொதுமக்களுக்கு கொசு மூலம் பரவும் நோய்கள் தடுப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
- காய்ச்சல் அதிகம் கண்டறியப்பட்ட இடங்களில் கூட்டுப் பணி மூலம் பணிபுரிய வேண்டும்.

<u>சுகாதார ஆய்வாளர்கள் செய்ய வேண்டியவை</u>

- காலை 7.00 மணிக்கு சுகாதார ஆய்வாளர்கள் DBC பணியாளர்களுக்கான Gate Meeting நடத்த வேண்டும்.
- DBC பணியாளர்கள் பணிபுரிய வேண்டிய இடத்திற்க்கான பணி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

- களப் பணிக்கு தேவையான பொருட்களுடன் DBC பணியாளர்கள் பணிக்கு செல்வதை உறுதி செய்ய வேண்டும்.
- களப் பணியாளர்களின் வேலைகளை குறுக்காய்வு செய்ய வேண்டும்.
- அரசு மருத்துவமனை, சென்னை மாநகராட்சி மருத்துவமனை, தனியார் மருத்துவமனை மற்றும் பகுப்பாய்வு கூடங்களில் காய்ச்சல் கண்டவர்களின் வீட்டிற்கு சென்று காய்ச்சலுக்கான காரணம் குறித்து கள ஆய்வு செய்ய வேண்டும்,
- காய்ச்சல், கள ஆய்வுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும்.
- அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகள், மாணவர் விடுதிகள் , புதிய கட்டுமானப் பணி இடங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களில் கொசுப்புழு வளரும் இடங்களை கண்டறிய ஆய்வு செய்ய வேண்டும்.
- கொசுப்புழு ஒழிப்புக்காக மேற்கொள்ளப்படும் புகைப்பரப்பும் மற்றும் மருந்து தெளிக்கும் பணியினை ஆய்வு செய்ய வேண்டும்.
- சுகாதார ஆய்வாளர்கள் பள்ளிகளில் மாணவ மாணவியர்களுக்கு காய்ச்சல் மற்றும் கொசுக்களால் பரவும் நோய்கள் குறித் , வீட்டில் 'கொசு உற்பத்தியாகும் பொருட்கள் பற்றியும் விழிப்புணர்வு அளிக்க வேண்டும். காய்ச்சல் கண்ட இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அளிக்க வேண்டும்
- காய்ச்சல் கண்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்து வீட்டிற்கு திரும்பிய நோயாளிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

எனவே மேற்கண்ட சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் DBC களப்பணியாளர்கள் செய்ய வேண்டியவைக்குறித்து ஆணையர் அவர்களால் இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

தற்போது மழை அவ்வப்பொழுது பெய்து வருவதால், மழைநீர்த் தேங்கக்கூடிய இடங்களில் கொசுப்புழுக்கள் வளர வாய்ப்புள்ளதால், பொது மக்கள் தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் உபயோகமற்ற டயர், தேங்காய் சிரட்டைகள், உடைந்த குடங்கள், உடைந்த சிமெண்ட் தொட்டிகள் முதலியவற்றில் தண்ணீர் தேங்கி கொசுப்புழுக்கள் உருவாகாத வகையில் அதனை உடனடியாக அகற்ற வேண்டும். மேலும், கிணறு, மேல்நிலைத்தொட்டி, கீழ்நிலைத்தொட்டி, தண்ணீர்த் தொட்டிகள் முதலியவற்றை கொசுக்கள் மற்றும் கொசுப்புழு புகாத வகையில் மூடி வைக்க வேண்டும். தண்ணீர் நிரப்பிய பூஜாடி மற்றும் கீழ்த்தட்டு, குளிர்ப் பதனப் பெட்டியின் கீழ்த்தட்டு, மணி பிளான்ட் போன்றவற்றில் தேங்கி நிற்கும் தண்ணீரை வாரமொருமுறை அகற்றி தங்களின் வீடு மற்றும் சுற்றுப்புறத்தை மக்கள் தூய்மையாகப் பராமரித்திட வேண்டும் என தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**